தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற திருத்தலங்களுள் 15-வது தலமாக விளங்கும் வடாரண்யேஸ்வரர் கோயில் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் அருங்குளம், ஆற்காடு குப்பம், கனகம்மாசத்திரம், மணவூர் உள்ளிட்ட 42 ஊராட்சிகள் உள்ளன.

ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், அம்மையார்குப்பம், பாலாபுரம், மைலார்வாடா, ராஜாநகரம், சந்தான வேணுகோபாலபுரம் உள்ளிட்ட 38 ஊராட்சிகள் அடங்கியுள்ளன. 2011-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1.04 லட்சம் ஆகும்.

தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள்.

ரூ.750 கோடி பாதாள சாக்கடை திட்டம் என்ன ஆனது?

5 ஆண்டுகளாக குடிநீர் இல்லை; கட்டணம் மட்டும் வசூல்

தாம்பரம் மாநகராட்சி கூட்டத்தில் கவுன்சிலர்கள் சரமாரி குற்றச்சாட்டு

தாம்பரம்

தாம்பரம் மாநகராட்சி கூட்டத்தின் போது, கடந்த ஆட்சியில் பாதாள சாக்கடை திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூ.750 கோடி என்ன ஆனது என அதிமுக கவுன்சிலர்கள் கேள்வி எழுப்பினர்.

தாம்பரம் மாநகராட்சி கூட்டம் மேயர் வசந்தகுமாரி தலைமையில் நேற்று நடைபெற்றது. துணை மேயர் காமராஜ், ஆணையர் பாலச்சந்தர், அதிகாரிகள் மற்றும் அனைத்துக் கட்சி கவுன்சிலர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் மொத்தம் 344 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கவுன்சிலர்கள் பேசும்போது, மாநகராட்சியின் பல்வேறு வார்டுகளில் தெரு நாய்கள் தொல்லை பல மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளாகத் தடுப்பூசி, கருத்தடை பணிகளை முறையாக மேற்கொள்ளாததே நாய்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம். தற்போது தெரு நாய்களுக்கு தடுப்பூசி, கருத்தடை செய்வதற்காக பல லட்சம் ரூபாய் ஒதுக்கி தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை அதிகாரிகள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்றனர்.

மேலும் 70 வார்டுகளிலும் மழைநீர் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றும், 51-வது வார்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்து, மாத்திரைகள் தட்டுப்பாடு உள்ளதுடன், ரத்தப் பரிசோதனை கூட முறையாக நடைபெறுவதில்லை என்றும் புகார் தெரிவித்தனர். சேலையூரில் மேஜர் முகுந்த் வரதராஜன் சாலையை ஒட்டிய குடியிருப்புகளுக்கு கடந்த 5 ஆண்டுகளாக குடிநீர் வழங்கப்படவில்லை. ஆனால், குடிநீர் கட்டணம் மட்டும் வசூலிக்கப்படுவதாக கவுன்சிலர்கள் குற்றம்சாட்டினர்.

மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்துக்காக கடந்த ஆட்சியில் ஒதுக்கப்பட்ட ரூ.750 கோடி என்ன ஆனது என அதிமுக கவுன்சிலர்கள் கேள்வி எழுப்பினர். 65-வது வார்டில் கால்வாய், சாலைப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், பூங்கா பராமரிப்புப் பணிகள் முறையாக நடைபெறவில்லை என்றும் புகார் தெரிவித்தனர்.

குரோம்பேட்டை, பல்லாவரம் பகுதிகளில் எல்இடி விளக்கு பராமரிப்புப் பணியை அதே நிறுவனத்துக்கு நீட்டித்து ரூ.24 லட்சமும், மற்றொரு பணிக்கு ரூ.45 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளதை திமுகவைச் சேர்ந்த 2-வது மண்டலக்குழு தலைவர் ஜோசப் அண்ணாதுரை சுட்டிக்காட்டி, முறையாக பணியாற்றாத நிறுவனத்துக்கு மீண்டும் நிதி ஒதுக்குவது ஏன் எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு, முறையான விசாரணைக்கு பிறகே பில் தொகை வழங்கப்படும் என மேயர் வசந்தகுமாரி பதிலளித்தார். தங்களது வார்டுகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாக குற்றம்சாட்டி அதிமுக கவுன்சிலர்கள் வெளிநடப்பு செய்தனர்.

காஞ்சிபுரம் புது நகர் வளர்ச்சி, பாரம்பரிய மறுமலர்ச்சி திட்டம் ரத்து

தமிழக அரசு அரசாணை வெளியீடு

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட இருந்த பரந்தூர் விமான நிலையம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் புது நகர் வளர்ச்சி மற்றும் பாரம்பரிய மறுமலர்ச்சித் திட்டமும் கைவிடப்பட்டு தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியின்போது, காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகர்ப்புற வளர்ச்சியை முறைப்படுத்தவும், வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில் பகுதிகளைப் பாதுகாக்கவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ) மூலம் விரிவான திட்டம் வகுக்கப்பட்டது. இதற்காக 62.78 சதுர கி.மீ. பரப்பளவில் உள்ள 18 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 'காஞ்சிபுரம் புது நகர்' உருவாக்கப்படும் என 2023-ம் ஆண்டு பிப்.22-ம் தேதி அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அடுத்த 20 ஆண்டுகளுக்கான தொலைநோக்குப் பார்வையுடன் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பழமை மாறாமல் நகரைப் புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், தற்போதுள்ள தவெக அரசு, காஞ்சிபுரம் புது நகர் வளர்ச்சித் திட்டம் மற்றும் பாரம்பரிய மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை முழுமையாகக் கைவிட முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் ஆர்.கிர்லோஷ் குமார் வெளியிட்டுள்ள அரசாணையில், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் 2023 பிப்.22 அன்று வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிக்கை ரத்து செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அலுவலர்கள் கூறியதாவது:

சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள 18 வருவாய் கிராமங்கள் புது நகர் திட்ட எல்லைக்குள் கொண்டுவரப்பட்டதால், அப்பகுதிகளில் உள்ள பெருமளவிலான விவசாய நிலங்கள் மற்றும் நீர்நிலைகள் ரியல் எஸ்டேட் மற்றும் வணிகப் பயன்பாட்டிற்கு மாறிவிடும் என்ற அச்சம் விவசாயிகளிடமும் மக்களிடமும் தொடர்ந்து இருந்து வந்தது. மேலும் கிராம ஊராட்சிகளின் திட்ட அனுமதி அதிகாரங்கள் மாற்றமடைந்து, உள்ளூர் மக்களின் தேவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு பெருநகர அளவிலான திட்டமிடல்கள் திணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதேபோல், பாரம்பரிய மறுமலர்ச்சிப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட இருந்த கடுமையான மண்டலக் கட்டுப்பாடுகளால் உள்ளூர் மக்களின் இயல்பான குடியிருப்பு மற்றும் வர்த்தகக் கட்டுமானப் பணிகள் பாதிக்கப்படும் சூழல் உருவானது.

பொதுமக்களின் இந்தக் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை முழுமையாகப் பரிசீலனை செய்த பின்னரே, இத்திட்டத்தை ரத்து செய்ய அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து அரசாணை வெளியிட்டுள்ளது. பரந்தூர் பசுமை விமான நிலையத் திட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில், இந்தத் திட்டமும் அதனைச் சார்ந்து முன்மொழியப்பட்ட திட்டம் என்பதால் கைவிடப்பட்டுள்ளது என்று அலுவலர்கள் தெரிவித்தனர்.

விவசாயம், உள்ளூர் சுயாட்சி, உள்ளூர் மக்களின் உரிமைகள் முக்கியம்தான் என்றாலும், இவை பாதிக்காத வகையில் காஞ்சிபுரத்தின் நீண்டகால உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு மாற்றுத் திட்டங்களை அரசு விரைந்து கொண்டுவர வேண்டும். இல்லையேல் மாவட்டத்தில் வளர்ச்சி பெரும் பின்னடைவைச் சந்திக்கும் வாய்ப்புகள் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

ரேஷன் அரிசி மீது கை வைத்தால்

தவெக ஆட்சி பொறுப்பை இழக்கும்

மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கருத்து

திருத்தணி

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த ஆக. 26-ம் தேதிமுதல் மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெற்று வந்தது.

இதன் நிறைவு பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலச் செயலாளர் பி.சண்முகம் பங்கேற்று பேசியதாவது: வேலையின்மை, விலைவாசி உயர்வு போன்றவற்றுக்கு ஆட்சியாளர்களுடைய தவறான அரசியல், சமூக பொருளாதார கொள்கைகளைத் தவிர வேறு காரணங்கள் கிடையாது. தமிழகம் மட்டுமல்லாமல், நாடு முழுவதும் விலை ஏற்றத்தால் பொருட்களை வாங்க முடியாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றனர்.

சமீபத்தில் தமிழக சட்டப் பேரவையில் வருவாய்த் துறை அமைச்சர் செங்கோட்டையன் பேசும்போது, "ரேஷன் அரிசியை வாங்கி ஆடு, மாடு, கோழிகளுக்கு தீவனமாக வழங்குகின்றனர். யாரும் சோறு செய்து சாப்பிடவில்லை" என்றார். மற்றொரு அமைச்சரோ, "ரேஷன் அரிசியில் இட்லி, தோசை செய்து சாப்பிடுகிறார்கள்" என்றார். தமிழக மக்களின் பிரதான உணவே அரிசிதான். ரேஷன் கடைகளில் வழங்கும் அரிசியை மக்கள் யாரும் சாப்பிடுவதில்லை என்று சட்டப்பேரவையில் தவறான காரணங்களைச் சொல்லி ரேஷன் கடையில் இனி அரிசி போட மாட்டோம் என்ற முடிவை நோக்கி அரசு போகிறதோ என்ற அச்சம் உள்ளது.

இலவச அரிசியை நம்பித்தான் பல லட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. ரேஷன் அரிசி மீது கை வைத்தால் தவெக ஆட்சி பொறுப்பை இழக்கும் என்றார்.

ஆர்.எம்.டி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அறிமுக நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்.

ஆர்.எம்.டி. பொறியியல் கல்லூரியில்

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அறிமுக நிகழ்ச்சி

சென்னை

ஆர்.எம்.டி பொறியியல் கல்லூரியில் 2026-27-ம் ஆண்டில் புதிதாக சேர்ந்துள்ள பி.இ./பி.டெக். முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் வகையில், அவர்களுக்கான அறிமுக நிகழ்ச்சி, அண்மையில் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆர்.எம்.கே. கல்விக் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் தலைமை தாங்கினார். அவர் தனது உரையில், மாணவர்கள் ஒழுக்கம், அர்ப்பணிப்பு, கடின உழைப்புடன் செயல்பட்டு, கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி, பெற்றோருக்கும் கல்வி நிறுவனத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆர்.எம்.கே. கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் ஆர்.எம்.கிஷோர் பேசும்போது, மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு மற்றும் அதன் நிகழ்நேரப் பயன்பாடுகளைப் புரிந்து கொண்டு, எதிர்கால தொழில்நுட்ப மாற்றங்களுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற தொழில் ஆலோசகரும், ஆய்வாளருமான ஜெயபிரகாஷ் ஏ.காந்தி, ஆர்.எம்.டி. பொறியியல் கல்லூரியின் முதல்வர் என்.அன்புச்செழியன் ஆகியோர் ஜப்பானியம், ஜெர்மன், மாண்டரின் போன்ற மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை கல்லூரி வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர்..

நிகழ்ச்சியில் ஆர்.எம்.கே கல்விக் குழுமத்தின் செயலர் யலமஞ்சி பிரதீப், ஆலோசகர்கள் வி.மனோகரன், எம்.எஸ். பழனிசாமி, ஆர்.எம்.டி. பொறியியல் கல்லூரியின் ஆராய்ச்சித் துறை டீன் கே.கே.தியாகராஜன், இயக்குநர் ஆர்.ஜோதி நாயுடு பங்கேற்று மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

கல்லூரியின் கல்விச் சூழல், நிறுவனத்தின் கொள்கைகள், மதிப்புகள், மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய பல்வேறு கல்வித் திறன் மேம்பாடு மற்றும் தொழில்துறை வாய்ப்புகள் ஆகியவற்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைந்தது.

காஞ்சியில் செப்.8-ம் தேதி நுகர்வோர் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2026-ம் ஆண்டுக்கான நுகர்வோர் அமைப்புகளின் 3-ம் காலாண்டு (ஜூலை – செப்டம்பர்) ஆய்வுக் கூட்டம், செப்டம்பர் 8-ம் தேதி பிற்பகல் 4.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தன்னார்வ நுகர்வோர் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கும் குறைகள், கோரிக்கைகள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நுகர்வோர்கள் மற்றும் நுகர்வோர் அமைப்பினர் இக்கூட்டத்தில் நேரில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் தி.சினேகா தெரிவித்தார்.

வேகத்தடையால் பைக்கிலிருந்து கீழே விழுந்தவர் உயிரிழப்பு

திருவள்ளூர்

திருவள்ளூர் அருகே உள்ள விடையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜோதி ராமலிங்கம்(55). இவர் நேற்று முன்தினம் மாலை தன் மோட்டார் சைக்கிளில் ஊத்துக்கோட்டைக்கு சென்றார். பின்னர் இரவு நரசிம்மன் என்ற உறவினருடன் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

ஊத்துக்கோட்டை - திருவள்ளூர் நெடுஞ் சாலையில், பூண்டி அடுத்த மயிலாப்பூர்,விநாயகர் கோயில் அருகே சென்று கொண்டிருந்தபோது, வேகத்தடை இருப்பதை கவனிக்காமல் வேகமாக மோட்டார் சைக்கிள் ஏறியதில் நிலை தடுமாறி சாலையில் விழுந்ததில் ஜோதிராமலிங்கம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்; நரசிம்மனுக்கு லேசான காயம் ஏற்பட்டது.

தகவலறிந்த பென்னலூர்பேட்டை போலீஸார் சம்பவ இடம் விரைந்து, ஜோதிராமலிங்கத்தின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படியில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு, இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிற்றேனர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படப்புகைகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

லாரியை ஓட்டிச் சென்றபோது மாரடைப்பால் ஓட்டுநர் உயிரிழப்பு

திருவள்ளூர்

ஆரம்பாக்கம் அடுத்த தண்டலம் பகுதியைச் சேர்ந்தவர் ராமு. லாரி ஓட்டுநரான இவர் நேற்று முன்தினம் இரவு செங்குன்றம் பகுதியிலிருந்து திருவள்ளூர் நோக்கி கன்டெய்னர் லாரியை ஓட்டிச் சென்றார்.

ஈக்காடு கண்டிகை பகுதியில் சென்று கொண்டிருந்த போது, ராமுவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. சுயநினைவை இழந்ததால் ராமு சென்ற கன்டெய்னர் லாரி, சாலையின் மையத் தடுப்பின் மீது மோதிய நிலையில் ராமு உயிரிழந்தார்.

புல்லரம்பாக்கம் போலீஸார் ராமுவின் உடலைக் கைப்பற்றி திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து, வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Varadha Rajan Vijay Raghavan Senkurichi, alias S.V. Vijay Raghavan, Vijay Raghavan V Senkurichi & Vijay Raghavan S/o S.V. Varadha Rajan, R/o B6, Casa Grand Aldea, Bharathiyar Nagar Main Rd, Thoraipakkam, Chennai–600097, have changed my name to Vijay Raghavan Senkurichi vide affidavit dt. 26/08/2026, sworn before Notary R.Gomathi

ACRE BANKING ASSETS WORK

அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
யூனிட் எண். 502, C விங், ஒன் BKC, ரேடியஸ் டெவலப்பர்ஸ், பிளாட் எண். C 66, G பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், மும்பை - 400 051.

2002-ஆம் ஆண்டின் சொத்துரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13(2)-ன் கீழான கோரிக்கை அறிவிப்பு

SARFAESI சட்டம், 2002-ன் பிரிவு 5-ன் விதிகளின்படி, உரிமை அளிப்பர் இடமிருந்து கடன் வாங்கியவரின் நிதிச் சொத்துக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிணையங்கள் அனைத்தையும் ACRE - ARC கையகப்படுத்தியுள்ளது. இந்தக் கடன் கையகப்படுத்தலின் மூலம், நிதி ஆவணங்கள் மற்றும் பிணையங்களின் அடிப்படையில் நிதிச் சொத்துக்களை மாற்றிக்கொடுத்தல் வாயிலாக, கடன் வாங்கியவரிடமிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடன்கள் தொடர்பான அனைத்து உரிமைகள், உடைமை மற்றும் நலன்களையும் ACRE – ARC அறங்காவலர் என்ற முறையில் பெற்றுள்ளது. இதன் விளைவாக, கடன் வாங்கியவருக்கு எதிரான பிணையம் பெற்ற கடன் வழங்குநர் என்ற நிலையில் அனைவருக்குப் பதிலாக ACRE – ARC செயல்படுகிறது; மேலும், கடன் வசதிகள் தொடர்பான நிலுவைத் தொகைகளை வசூலிக்கவும், பிணையத்தின் மீதான உரிமையை அமல்படுத்தவும் ACRE – ARC-க்கு உரிமை உள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	ACRE டிரஸ்ட்	ஒப்படைப்பு வங்கி	ஒப்படைப்பு நாள்	கடன்தாரர் & இணை-கடன்தாரர் பெயர்	மொத்த நிலுவைத் தொகை	NPA நாள் & கோரிக்கை அறிவிப்பு நாள்
1	106MSM0010 21303	Trust 188	Edelweiss Asset Reconstruction Company Limited	31-டிசம்பர் -25	நந்தினி M J. மணிகண்டன்	ரூ.388277.68/- 26-08-2026 அன்று	25-பிப்ரவரி-25 & 28-ஆகஸ்ட்-26

அடமானம் சொத்து விவரம் : அனைத்து பகுதிகளும், திருவள்ளூர் D. வட்டம், பொன்னேரி வட்டம், வட சென்னை பதிவு மாவட்டம், பொன்னேரி சார்-பதிவு வட்டம், எண்.78, அனுபம்பட்டு கிராமம், பட்டா எண். 290, பழைய சர்வே எண். 172/5, புதிய சர்வே எண். 172/9, மொத்த ஏரியா 1308 சதுர அடி மட்டும், மனை 00354 சதுர மீட்டர்கள் செக்யூரிக்ஸ் மற்றும் அளவு, வடக்கு : சர்வே எண். 172/7 C.R தாமோதரன் நிலம் அளவு 28 அடி 3 அங்குலம், தெற்கு: பத்து அடி பொது சாலை தெற்கில், அகலம் 22 அடி, கிழக்கு : அதே சர்வே எண்ணில் பெரிய மனை அளவு கிழக்கில் 51 அடி, மேற்கு : சர்வே எண்கள். 172/8, 173/A3 (பரமசிவன் வீடு மற்றும் நிலம்) அளவு 53 அடி.

அறிவிப்பை மாற்று முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் பிணையாளர்கள் (பொருந்தக்கூடிய இடங்களில்) ஆகியோர், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்தத் தவறினால், "நிதிச் சொத்துகளின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002"-இன் விதிகளின்படி, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்கள் முடிந்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், பிரிவு 13(13)-இன் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதையும், அடமானம் வைக்கப்பட்ட சொத்தை விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது உரிமை மாற்றம் செய்யவோ கூடாது என்று கடன் பெற்றவர்கள், பிணையாளர்கள் மற்றும் அடமானம் வைத்திருப்பவர்கள் ஆகியோருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

நாள்: 01.09.2026, இடம்: தமிழ்நாடு Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைசஸ் லிமிடெட்

தமிழ்நாடு அரசு
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் காலேண்டர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை வெளியிடும் மாதிரி மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin)-ஐ ஆன்லைனில் அச்சிடும் பணிக்கு இரு போன்று அரசு அல்லது அரசு சார்ந்த அலுவலகங்களின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து வரும் 15.09.2026 திங்கள் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 15.09.2026 மாலை 4.00 மணிக்கு மாதிரி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, வெது நகர், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அலுவலக அலுவலகத்தில் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 35 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 15.09.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாதிரி ஒப்பந்தப்புள்ளி செய்திகள் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, வெது நகர், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) தேசிய வெளியீடு பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த "மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பெறுதல்" (முன்னதாக பெறப்பட்ட வங்கியில் பெறப்பட்ட ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) தேசிய வெளியீடு பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்). 15.09.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி மாதிரிகள் திறக்கப்படும். பணம் செலுத்தாமல் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை

Central Bank of India
சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
1911 से अपने सिरा 'बेहिरत' 'CENTRAL' TO YOU SINCE 1911

தாம்பரம் / சேலையூர் கிளை
எண்.1, குருசாமி நகர், வேளச்சேரி மெயின் ரோடு, கௌரிவாக்கம், சென்னை-600 073 Ph No. 044-22281900

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1) -ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள் பெயர்: Mr.நவீன் S, S/o.Mr.சங்கர் சக-கடன்தாரர்: Mrs.பானு W/o.Mr.சங்கர், இருவரது முகவரி, புதிய எண்.6, பழைய எண்.70, வெள்ளாளர் தெரு, அமிஞ்சிக்கரை, சென்னை-600029

கோரிக்கை அறிவிப்பு தேதி: 23.07.2024/ கடன் நிலுவைத்தொகை: 31.08.2026 அன்றுள்ளபடி ₹53,09,028.13 மற்றும் வட்டி, கட்டணங்கள்; சுவாதீனம் அறிவிப்பு தேதி: 26.09.2024

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

சர்வே எண்.190B/1A7 பட்டா படி புதிய சர்வே எண்கள்.190B/452A & 190B/452B, மனை எண்.431 பகுதி (கிழக்கு மற்றும் மேற்கு பக்கம்), "வேல் என்கிளேவ்", சிவபிரகாஷ் நகர், (CMDA அனுமதிக்கப்பட்ட லேஅவுட் LPDM/DTP No.1/75), குரப்பட்டு கிராமம், மாதவரம் தாலுகா, சென்னை மாவட்டம் (முன்னர் திருவள்ளூர் மாவட்டம்), ப்ளாட் எண்.F-2, முதல் தளம், மனை எண்.431 பகுதி, "வேல் என்கிளேவ்", சிவபிரகாசம் நகர், குரப்பட்டு கிராமம், மாதவரம் தாலுகா, திருவள்ளூர்-600 066 என்னும